## Tamil Poems recital 1 ( 5 & 6 years)

### கனவு காணலாம் வாருங்கள்!

கவிதை பாடும் காரணமல்ல
கவிஞன் எனும்நோக்கமல்ல
மனிதன் என்னும் மாண்பு மட்டும்
மனதில் கொண்டதால்
கனவு காணலாம் வாருங்கள்!!
கவிதை சொல்லி அழைக்கின்றேன்
நிலவு சுடும் வேளை
நெருப்புக் குளிரும் சோலை
கண்டு மகிழும் உலகம்
கனவில் உண்டு காண்பீர்!

ஆற்ற முடியாத் துயரம்
தீர்க்க முடியா வறுமை
மாற்ற முடியா நோய்
அனைத்தும் அற்ற உலகம்
கனவில் உண்டு பாரீர்!
காண்போம் அதனை வாரீர்!!
தேவைகளின் நிமித்தம்
தாவுகின்ற மாந்தர்
தேவையற்ற போதும்
சீண்டுகின்ற கூட்டம்
தேவையில்லை என்றால்
சேர்ந்து செல்வோம் நாம்
கனவு என்னும் உலகம்